**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**முன்னிலை :- திரு. எஸ். விஜயகுமார், எம்.ஏ., எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2022ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18ம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்குஎண்.123/2021**
**(CNR.No.TNVP02-000332-2021)**

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், ஒதியத்தூர் கிராமம், திருவண்ணாமலை மெயின் ரோடு என்ற முகவரியில் வசித்து வரும் கண்ணையன் குமார் இந்து சுமார் 56 வயதுடைய பூபதி.

... வாதி

/எதிர்/

1. விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், ஒதியத்தூர் கிராமம், எண்.135, முருகன் கோயில் தெரு என்ற முகவரியில் தற்காலம் வசிக்கும், ஆதிமூலம் அவர்களின் மனைவி, இந்து சுமார் 32 வயதுள்ள நதியா.

2. விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், ஒதியத்தூர் கிராமம், எண்.135, முருகன் கோயில் தெரு என்ற முகவரியில் தற்காலம் வசிக்கும், முத்துசாமி அவர்களின் மனைவி இந்து சுமார் 69 வயதுள்ள ராதா.

... பிரதிவாதிகள்

வழக்கு சொத்தை பொருத்து வாதிக்கு விளம்புகை பரிகாரம் உத்தரவு செய்தும், வழக்கு சொத்திலுள்ள பிரதிவாதிகளிடமிருந்து சுவாதின மீட்டடைவு உத்தரவிட்டும் மற்றும் செலவுத் தொகைக்காக இவ்வழக்கு தாக்கல்.

இத்தாவா 11.03.2021, 17.03.2021 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாவின் மதிப்பு ரூ.3,69,756/-க்கு தமிழ்நாடு

நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25(a)-ன்படி ரூ11,093/- செலுத்தப்பட்டுள்ளது.

இந்த தாவா 23.05.2018, 20.01.2021 ஆகிய தேதிகளில் சமூகம் கோர்ட்டிலாகா விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், ஒதியத்தூர் கிராமத்தில் வியாஜ்ஜிய மூலம் உற்பத்தி.

இவ்வழக்கு 29.10.2021 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மு.காளிதாஸ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு அழைப்பானை சார்வாகியும் அவர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் ஒருதலைபட்ச படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## தீர்ப்பாணை

1. தாவாவில் வாதி கோரிய படி வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்து உத்தரவிடப்படுகிறது.
2. வழக்கு சொத்திலுள்ள பிரதிவாதிகளிடமிருந்து வாதி சுவாதீன மீட்டடைவு பெற உத்தரவிடப்படுகிறது.
3. பிரதிவாதிகள் வாதியிடம் வழக்கு சொத்தை ஒப்படைக்க கால அவகாசம் இரண்டு மாதங்கள்.
4. தாவா செலவுத் தொகை ரூ.(இல்லை)/-ஐ பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும்.

## (செலவுத் தொகை பட்டியல்)

(வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

## பி ஷெட்டியூல் சொத்து விவரம்

விழுப்புரம் ரி.டி. அரகண்டநல்லூர் சப்ரியைச் சேர்ந்த, கண்டாச்சிபுரம் வட்டம், ஒதியத்தூர் கிராமத்தில், சர்வே எண்.74/6C ஆக இருந்து பின்னர் சர்வே எண்.74/6C1 ஆக கிடைத்து தற்போது நில உரிமை பட்டா எண் 992-ன் படி புதிய சர்வே எண்.74/6C1A 0.30.94 ஏர்சில் வடக்கில் - முருகன் கோயில் தெரு, தெற்கில் - சுப்ரமனியன் இடம், கிழக்கில் - ஏழுமலை இடம், மேற்கில் - சக்திவேல் இடம், இதன் மத்தியில் கி.மே. ஜாதியடி 49.1/2 அடி தெ.வ 44.1/2 அடிக்கு 2202.75 சதுரடிக்கு 204.71 சதுர மீட்டர் அளவுள்ள மனையும். மேற்படி மனையில் கி.மே. ஜாதியடி 14 தெ.வ 21 அடிக்கு 294 சதுரடியில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி மெத்தை வீடும், மேற்படி வீட்டில் உள்ள மின் இணைப்பு நெ 821-ம் இதன் காப்புத் தொகை முழுவதும், கதவு நெ 3/135A உள்பட தங்களுக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டோம், மார்கெட் மதிப்பு ரூ.3,69,756/-.

2022ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இட்டுத்தரப்பட்டது.

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.